## உத்தர பிரதேசத்தின் கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்த அனுமதி: வாரணாசி நீதிமன்றம் உத்தரவு


கோப்புப்படம்

**வாரணாசி:** உத்தர பிரதேசம், வாரணாசியில் அமைந்துள்ள கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்த வாரணாசி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

உத்தர பிரதேசத்தின் வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலை ஒட்டி கியான்வாபி மசூதி உள்ளது. மசூதி சுவரில் அமைந்துள்ள சிங்கார கவுரி அம்மனை வழிபட அனுமதி கோரி கடந்த 2021-ல் 5 இந்து பெண்கள் வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இதனை விசாரித்த நீதிமன்றம், கியான்வாபி மசூதியில் கள ஆய்வு நடத்த உத்தரவிட்டது. இதன்படி மசூதியில் ஆய்வு நடத்தப்பட்டு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் மசூதியின் ஒசுகானாவின் நடுவே சிவலிங்கம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த சூழலில் கியான்வாபி மசூதியில் இந்திய தொல்லியல் துறை ஆய்வு நடத்த வேண்டும் என்று கோரி 4 இந்து பெண்கள் சார்பில் வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையில் இந்து பெண்கள் சார்பில் கூறும்போது, “ஆதி விஸ்வேஸ்வரரின் கோயில் மீது கியான்வாபி மசூதி கட்டப்பட்டு உள்ளது. இதை உறுதி செய்ய கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்த வேண்டும்" என்று வாதிட்டனர்.

கியான்வாபி மசூதி நிர்வாகம் கூறும்போது, “எந்தவொரு வழிபாட்டுத் தலத்தின் மீதும் மசூதி கட்டப்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்கள் கடந்த 14-ம் தேதி முடிவடைந்தன. இந்த சூழலில் வாரணாசி மாவட்ட நீதிபதி ஏ.கே.விஸ்வேஷா நேற்று பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

வாரணாசியின் கியான்வாபி மசூதியில் இந்திய தொல்லியல் துறை அறிவியல்பூர்வமான கள ஆய்வினை நடத்த வேண்டும். ஒசுகானா பகுதியில் மட்டும் ஆய்வு நடத்தக்கூடாது. ஆய்வின்போது மசூதிக்கு எவ்வித சேதமும் ஏற்படக்கூடாது. ஆய்வின்போது தொழுகை நடத்தலாம். ஆகஸ்ட் 4-ம் தேதிக்குள் தொல்லியல் துறை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டார்.

**கருப்பைநீக்க அறுவை சிகிச்சைகள் 2.3 சதவிகிதம் அதிகரிப்பு - மக்களவையில் மத்திய அரசு தகவல்**



**புதுடெல்லி:** தனியார் மருத்துவமனைகளில் கருப்பை நீக்க அறுவை சிகிச்சை எண்ணிக்கை 2.3 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இந்த தகவல், மக்களவையில் மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பாரதி ப்ரவின் பவார் இன்று தெரிவித்தார்.

இது குறித்து விழுப்புரம் தொகுதி எம்.பியான டி.ரவிகுமார் எழுப்பிய கேள்வியில், ''கருப்பை அகற்றுதல் கண்காணிப்புக் குழுக்கள் தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளனவா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையெனில், அதற்கான காரணங்கள் மற்றும் அரசு இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அதற்கான முன்மொழிவுகள் யாவை?

தனியார் மருத்துவ மனைகளில் கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சைகள் பெண்களின் சம்மதம் பெறப்படாமலும், அதன் பக்க விளைவுகள் குறித்து அவர்களுக்குப் போதிய விளக்கம் அளிக்கப்படாமலும் நெறியற்ற முறையில் மேற்கொள்ளப்படுவது அதிகரித்து வருவதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா? அத்தகைய தனியார் மருத்துவமனைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது தொடர்பாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு ஏதேனும் வழிகாட்டுதல்களை ஒன்றிய அரசாங்கம் வழங்கியிருக்கிறதா?'' எனக் கேட்டிருந்தார்.

இதற்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் டாக்டர் பாரதி ப்ரவின் பவார் எழுத்துமூலம் அளித்த பதில் பின்வருமாறு: 'நெறியற்ற முறையில் கருப்பை நீக்க அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்களை இந்திய அரசு 2022 அக்டோபரில் அறிமுகப்படுத்தியது. அவை அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களுக்கும் ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. கருப்பை நீக்க அறுவை சிகிச்சை தொடர்பான கண்காணிப்புக் குழுக்களை தம் மாவட்ட அளவில் அமைப்பது உட்பட வழிகாட்டுதல்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

இந்திய அளவில் தேசிய கருப்பை நீக்க கண்காணிப்புக் குழு (என்எச்எம்சி) இந்திய ஒன்றிய அரசின் சுகாதாரத் துறையின் கீழ் இயங்கும் நேஷனல் ஹெல்த் மிஷனின் கூடுதல் செயலாளர் மற்றும் பணி இயக்குநரின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. 2019-2021 க்கு இடையிலான தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு-5 (என்எப்எச்எஸ்-5 ) இன்படி, தனியார் மருத்துவ மனைகளில் கருப்பை நீக்க அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 2.3 சதவிகிதம் அதிகரித்துள்ளது.


2015-16 இல் என்எப்எச்எஸ்-5 இன்படி அது, 67.3 சதவிகிதமாக இருந்தது. 2019-2021 இல் அது 69.6 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தேவையில்லாத விதத்தில் கருப்பை நீக்க அறுவை சிகிச்சை செய்வதைத் தவிர்க்க வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை கறாராக பின்பற்றும்படிக் கூறி, இந்திய அரசு 2022 அக்டோபர் 4 இல் உத்தரவிட்டுள்ளது.' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நெறிமுறைகளில் இடம்பெற்ற அம்சங்கள் பின்வருமாறு: 'அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் கருப்பை நீக்க அறுவை சிகிச்சை குறித்த விவரங்களை அதற்கெனக் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சரியாக நிரப்புவதற்கு மாநில, மாவட்ட அளவிலான பொறுப்பு அதிகாரி

வழிவகை செய்யவேண்டும். மாவட்ட அளவில், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கருப்பை நீக்க அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பெண்களின் வரிசைப் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும். அதில் அவரது வயது, தொழில், முந்தைய மருத்துவ/அறுவை சிகிச்சை வரலாறு, கருப்பை நீக்கம் செய்ததற்கான காரணம் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

40 வயதுக்குள் கருப்பை நீக்க அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பெண்கள் குறித்த விவரங்களை முறையாக ஆய்வு செய்ய வேண்டியது மாவட்ட அளவிலான பொறுப்பு அதிகாரியின் கடமையாகும். பொது மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்களுக்கு இதைப்பற்றி தேவையான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இவை தவிர, மாநில அளவிலான குழு கருப்பை நீக்க அறுவை சிகிச்சைகள் தேவையில்லாமல் செய்யப்படுகின்றனவா என்பதை ஆராய மாவட்ட அளவிலான தரவுகளை 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடி ஆய்வு செய்ய வேண்டும்.' இவ்வாறு மத்திய இணை அமைச்சர் வெளியிட்ட பதிலின் இணைப்பில் தெரிவித்துள்ளார்.

**Genesis | செய்தி எழுதும் திறன்கொண்ட கூகுளின் ஏஐ**




**கலிபோர்னியா:** கூகுள் நிறுவனம் ‘ஜெனிசிஸ்’ எனும் செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட புராடெக்டை வடிவமைத்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. இது நடப்பு நிகழ்வுகள் மற்றும் அது தொடர்புடைய தகவல்களை திரட்டி செய்திக் கட்டுரைகளாக உருவாக்கும் திறன் கொண்டதாம். அது குறித்து பார்ப்போம்.

டெக் உலகில் அனைவரையும் பேச வைத்துள்ளது ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவின் வரவு. சாட்ஜிபிடி தான் அதற்கான விதையை உலக அளவில் பரவலாக தூவியது. அதன் வழியில் கூகுள் தொடங்கி பல்வேறு நிறுவனங்கள்

ஏஐ சாட்பாட்களை அறிமுகம் செய்தன. இத்தகையச் சூழலில் செய்தி எழுதும் திறன் படைத்த ஜெனிசிஸ் ஏஐ குறித்த தகவல் வெளிவந்துள்ளது.

இப்போதைக்கு இது வடிவமைப்பு நிலையில் உள்ளதாம். இது குறித்த அதிகாரபூர்வ தகவலை கூகுள் இன்னும் வெளியிடவில்லை. செய்தி எழுத செய்தியாளர்களுக்கு உதவுவது தான் இதன் பிரதான பணி என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் செய்தி எழுதும் பணி எளிமையாகும் என சொல்லப்படுகிறது. இப்போதைக்கு சிறிய அளவில் இயங்கி வரும் சில செய்தி நிறுவனங்களுடன் இணைந்து சோதனை மேற்கொண்டு வருகிறதாம்.

இது குறித்த டெமோவை அமெரிக்க நாட்டின் சில முன்னணி செய்தி நிறுவனங்களுக்கு கூகுள் வழங்கியுள்ளது. இருந்தாலும் அதில் பங்கேற்ற பத்திரிகையாளர்கள் இது தொடர்பாக தங்கள் கவலையை வெளிப்படுத்தி உள்ளனர். குறிப்பாக, துல்லியமான செய்திகளை எழுதுவதில் மனித சக்தியின் பங்களிப்பு குறித்து அவர்கள் அழுத்தமாக பேசியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது

**சென்னையில் 3 கட்டங்களாக மிஷன் இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம்: மேயர் பிரியா தகவல்**



கையேட்டினை வெளியிட்ட மேயர் பிரியா

**சென்னை:** சென்னையில் 3 கட்டங்களாக மிஷன் இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம் நடைபெறும் என்று மேயர் பிரியா தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற உள்ள மிஷன் இந்திர தனுஷ் 5.0 தடுப்பூசி முகாம் தொடர்பான மாவட்ட பணிக்குழுக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தீவிர மிஷன் இந்திர தனுஷ் 5.0 தடுப்பூசி செயல்பாட்டு வழிமுறை கையேட்டினை மேயர் பிரியா வெளியிட்டு பேசும்போது, "இந்தியாவில் முதன்முறையாக 2014-ம் ஆண்டு

இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம் தொடங்கப்பட்டது. சென்னை மாநகராட்சியில் முதல் இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம் 22.06.2015 முதல் 30.06.2015 வரை நடைபெற்றது. இதுவரை சென்னை மாநகராட்சியில் 2015ம் ஆண்டில் 5 முறை, 2016-ம் ஆண்டில் 2 முறை மற்றும் 2022-ம் ஆண்டில் ஒரு முறை என மொத்தம் 8 முறை நடைபெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் ஆகிய இடங்களில் மூன்று கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல் கட்டம் 07.08.2023 முதல் 12.08.2023 வரையிலும், இரண்டாம் கட்டம் 11.09.2023 முதல் 16.09.2023 வரையிலும், மூன்றாம் கட்டம் 09.10..2023 முதல் 14.10.2023 வரையிலும் நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் இந்திர தனுஷ் தடுப்பூசி முகாம்கள் அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் ஆகிய இடங்களில் நடத்தப்பட தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசி முகாம்களில் சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் பணிபுரிவர். இந்த முகாம்கள் நடைபெறுவதற்கு முன்னதாக விடுபட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அந்த நாட்களில் தடுப்பூசிக்கு தகுதியான குழந்தைகள் ஆகியோரை கணக்கிடும் பணி 18.07.2023 முதல் நடைபெற்று வருகிறது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். அனைத்து 0-2 வயதிற்குட்பட்ட விடுபட்ட குழந்தைகள், 2-5 வயதுள்ள விடுபட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோருக்கு தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி முகாம் நாட்களில் தடுப்பூசி மருந்து கொடுக்கப்படும். மேலும், இடம்பெயர்ந்து வாழும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் முகாம் நடைபெறும் நாட்களில் அவர்வர்கள் வசிக்கும் இடத்திலேயே தடுப்பூசி போடப்படும்" என்று மேயர் பிரியா கூறினார்.